பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

26 04 2024 12 40 வெள்ளிக்கிழமை நண்பகல்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவை தேர்தலுக்கான இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு தற்போது விறுவிறுப்பாகவும், அமைதியாகவும் நடைபெற்று வருகிறது.

2. ஐந்தாம் கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

3. மின்னனு வாக்குப்பதிவு எந்திரங்களில் பதிவான அனைத்து வாக்குகளையும் வி வி பேட் ஒப்புகை சீட்டுடன் சரிபார்க்க வேண்டுமென்று கோரி தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மனுக்களையும் உச்சநீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்தது.

4. இந்தியா – தென்கொரியா இடையே ஆயுதப்பரவல் தடைக்கான ஆலோசனைக் கூட்டம் சியோல் நகரில் இன்று நடைபெற்றது.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் கொல்கத்தா – பஞ்சாப் அணிகள் மோதுகின்றன.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

26 04 2024 12 40 2-வது கட்ட வாக்குப்பதிவு

மக்களவைக்கு இரண்டாம் கட்ட தேர்தலுக்கான வாக்குப்பதிவு தற்போது அமைதியாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்று வருகிறது.

வாக்குப்பதிவு மாலை ஆறு மணி வரை நடைபெறுகிறது.

காலை 11 நிலவரப்படி கேரளாவில் சுமார் 26 சதவீத வாக்குகளும், கர்நாடகாவில் 22 சதவீதமும், ராஜஸ்தானில் 27 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

உத்திரபிரதேசத்தில் 24, மகாராஷ்டிராவில் 19, மத்திய பிரதேசத்தில் 28, அஸ்ஸாம் 27, பீகாரில் 22, மேற்குவங்கம் 31, சத்திஷ்கர் 35, மணிப்பூர் 33, திரிபுராவில் 36. ஜம்மு-கஷ்மீரில் 27 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்து வருவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

12 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்ள 88 தொகுதிகளுக்கு தற்போது வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.

வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் மொத்தம் ஒரு லட்சத்து 67 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் பணியில் 16 லட்சத்திற்கும் மேற்பட்ட அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

26 04 2024 12 40 2-வது கட்ட வாக்குப்பதிவு - 2

பாதுகாப்பு பணியில் அந்தந்த மாநில காவல்துறையுடன் துணை ராணுவப்படையினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதுடன், வெப் கேமரா மூலம் கண்காணிக்கப்படுவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

எல்கே /ச தில்லி /டெஸ்க் / 21

பிரதமர் - வேண்டுகோள்

ஜனநாயகத்திற்கு வலுசேர்க்கும் வகையில் மக்களவைக்கு இன்று நடைபெறும் இரண்டாவது கட்ட தேர்தலில் அனைவரும் தங்களது வாக்குரிமையை செலுத்த வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திரமோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், இளைஞர்கள் மற்றும் பெண்கள் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து தங்களது வாக்குரிமையை தவறாமல் பயன்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

எல்கே /ச தில்லி / 7

4-ஆம் கட்டம்-வேட்புமனு

இதனிடையே மூன்றாம் கட்டமாக அடுத்த மாதம் ஏழாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ள தொகுதிகளில் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

அரசியல் கட்சிகளின் தலைவர்களும், வேட்பாளர்களும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் நான்காம் கட்ட தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை தற்போது நடைபெற்று வருகிறது.

வேட்புமனுக்களை திரும்பப் பெற இம்மாதம் 29-ஆம் தேதி கடைசி நாளாகும்.,

ஒன்பது மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ள 96 தொகுதிகளில் அடுத்த மாதம் 13-ஆம் தேதி நான்காவது கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

ஆந்திரப்பிரதேச சட்டப்பேரவை தேர்தலுக்கு தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனையும் தற்போது நடைபெற்று வருகிறது.

எல்கே /ச தில்லி / 11

5-ஆம் கட்ட –வேட்புமனு

மக்களவைக்கு ஏழு கட்டங்களாக தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், ஐந்தாம் கட்ட வாக்குப்பதிவுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

இதற்கான அறிவிக்கையை தேர்தல் ஆணையம் இன்று வெளியிட்டது.

ஆறு மாநிலங்கள் மற்றும் இரண்டு யூனியன் பிரதேசங்களில் உள்ள மொத்தம் 49 தொகுதிகளில் ஐந்தாவது கட்ட வாக்குப்பதிவு அடுத்த மாதம் 20-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

உத்திரபிரதேசத்தில் 14 தொகுதிகளிலும், மகாராஷ்டிராவில் 13, மேற்குவங்கத்தில் ஏழு, ஒடிஸா, பீகார் ஆகிய மாநிலங்களில் தலா ஐந்து, ஜார்க்கண்டில் மூன்று, ஜம்மு-கஷ்மீர் மற்றும் லடாக்கில் தலா ஒரு தொகுதகளிலும் ஐந்தாம் கட்ட தேர்தல் நடைபெறவுள்ளது.

எல்கே /ச தில்லி / 10

விவிபேட் - உச்சநீதி

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் பதிவான அனைத்து வாக்குகளையும் வி வி பேட் ஒப்புகை சீட்டுடன் 100 சதவீதம் சரிபார்க்க வேண்டுமென்று கோரி தாக்கல் செய்யபப்பட்ட அனைத்து மனுக்களையும் உச்சநீதிமன்றம் இன்று தள்ளுபடி செய்தது.

இந்த தீர்ப்பை வழங்கிய நீதிபதிகள் திரு சஞ்சீவ் கன்னா, திரு தீபங்கர் தத்தா ஆகியோர் அடங்கிய பெஞ்ச் வாக்குச்சீட்டு முறையை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையையும் நிராகரித்தது.

தேர்தல் ஆணையத்தின் நடைமுறைகளை சந்தேகிப்பது குழப்பங்களுக்கு வழிவகுக்கும் என்றும் நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்டனர்.

எல்கே /ச நெட் / 12

விவிபேட் - உச்சநீதி - 2

தேர்தல் நடைமுறையின்போது மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் சின்னங்கள் பொருத்தப்பட்ட பின், அவற்றை கண்டெய்னர்களில் பாதுகாப்பாக வைத்து சீல் செய்யபபட வேண்டுமென்றும், அதில் வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகளின் முத்திரையும் இடம்பெற்றிருக்க வேண்டுமென்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் முறைகேடு நடந்திருப்பது தெரியவந்தால் வேட்பாளர்கள் ஏழு நாட்களுக்குள் தேர்தல் ஆணையத்தில் புகார் அளிக்கலாம் என்றும் அவர்கள் கூறினர்.

இதற்காக ஆகும் செலவை புகார் அளிக்கும் வேட்பாளர்கள் ஏற்க வேண்டுமென்றும், வாக்குப்பதிவு எந்திரங்களில் முறைகேடு நடந்திருப்பது உறுதி செய்யப்பட்டால் அந்த தொகை திருப்பி அளிக்கப்பட வேண்டுமென்றும் நீதிபதிகள் தங்களது தீர்ப்பில் கூறியுள்ளனர்.

எல்கே /ச தில்லி / 12

இந்தியா – தென்கொரியா

இந்தியா – தென்கொரியா இடையேயான ஆயுதப்பரவல் தடைக்கான ஆலோசனைக் கூட்டம் சியோல் நகரில் இன்று நடைபெற்றது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில், அணு ஆயுதம், ரசாயனம் மற்றும் உயிரி தொழில்நுட்ப ஆயுதங்களின் பரவலாக்கத்தை உலக அளவில் முடிவுக்குக் கொண்டு வருவது குறித்தும் இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளது.

மண்டல அளவில் நவீன ஆயுதப்பரவலை தடுப்பது குறித்தும், விண்வெளியில் வெளிவட்டார பாதுகாப்பு தொடர்பான விஷயங்கள் குறித்தும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ராணுவத்தில் பயன்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்தும் இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா தரப்பில் சர்வதேச பாதுகாப்பு விவகாரங்களுக்கான இணை செயலர் திரு **Muanpui saiawi** தலைமையிலான குழுவினரும், தென்கொரியா தரப்பில் அந்நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் ஆயுதப்பரவல் பிரிவுக்கான தலைமை இயக்குநர் திரு யுவாங் ஜாங்-கும் பங்கேற்றனர்.

எல்கே / தில்லி / 17

நேரடி வரிகள்-காலக்கெடு

அறக்கட்டளைகள் மற்றும் கல்வி நிறுவனங்கள், 10-**A,** 10-**AB** படிவங்களை சமர்பிப்பதற்கான காலக்கெடு ஜூன் மாதம் 30ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மத்திய நேரடி வரிகள் வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த 2022-23ஆம் நிதியாண்டுக்கான 10-**A** படிவத்தை தாக்கல் செய்ய தவறியவர்கள் 10-**AC** படிவத்தை தாக்கல் செய்யலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்த விவரங்களை **www.incometaxindia.gov.in** என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எல்கே /ச தில்லி — 8

மதுரை — திருவிழா

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் சித்திரை திருவிழாவையொட்டி நடைபெற்ற மீனாட்சி — சுந்ரேஸ்வரர் திருக்கல்யாண வைபத்திற்குப் பின் அருள்மிகு கள்ளழகர் பூப்பல்லக்கில் அழகர்மலைக்குச் செல்லும் நிகழ்ச்சி இன்று அதிகாலை நடைபெற்றது.

வழிநெடுகிலும் 450-க்கும் மேற்பட்ட மண்டகப் படிகளில் கள்ளழகர் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

*( வாய்ஸ்பைட் - ரகுராஜா ) ---50—செகண்ட்*

எல்கே /ச ரகுராஜா / 6**+14=20**

வானிலை

நாட்டின் கிழக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

பீகார், ஜார்க்கண்ட், ஆந்திரப்பிரதேசத்தின் கடலோரப்பகுதி, ஏனம், தெலங்கானா, ராயலசீமா, கர்நாடகாவின் உட்பகுதி மற்றும் உத்தரபிரதேசத்தின் கிழக்குப் பகுதிகளில் கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

அத்துடன், உத்தரபிரதேசத்தின் மேற்குப் பகுதி மற்றும் கொங்கன் பகுதிகளிலும் வரும் 29-ஆம் தேதிவரை கடும் வெப்பம் நிலவக்கூடும் என்று தெரிவித்துள்ளது.

அஸ்ஸாம், திரிபுரா, மேகாலயா, கேரளா, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் கோவாவில் நாளை மறுநாள் வரை கடும் வெப்பம் நிலவக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, வடமேற்கு பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு லேசான மழை பெய்யக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசம், உத்ராகண்ட் ஆகிய மாநிலங்களிலும், ஜம்மு காஷ்மீர், லடாக் யூனியன் பிரதேசங்களிலும் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாக அது தெரிவித்துள்ளது.

வானிலை – 2

பஞ்சாப், ஹரியானா, சண்டிகர், தில்லி, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்கே /ச தில்லி / 18

விளையாட்டுச் செய்திகள்

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் கொல்கத்தா அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

---------

அமெரிக்காவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் அர்ஜூன் கதே - ஜீவன் நெடுஞ்செழியன் இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---------

எல்கே /ச நெட் / 6